**மத்திய கலாசார நிதியம் - 2018**

**----------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

மத்திய கலாசார நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

2003 யூன் 02 ஆம் திகதிய இலக்கம் PED/12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தாமதமடைந்ததன் காரணமாக 2020 ஆகஸ்ட் 24 ஆந் திகதி 3.i தொகுதியின் கீழ் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

எனது இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

நிதி நிலைமைக் கூற்றில், நிதிச் செயலாற்றல் கூற்றில், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான விடயங்களின் மாற்று முறைமையின் மூலம் உறுதிப்படுத்துவதற்கோ அல்லது சான்றுறுதிப்படுத்தவோ எனக்கு முடியாதிருந்தது. அதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்ட பெறுமதி அல்லது விடயங்களின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதி அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக எந்தவொரு சீராக்கங்களைச் செய்வதற்கும் தேவையானவைகளை எனக்கு தீர்மானிக்க முடியாதிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

**1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| உரிய நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 29(இ) பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்றின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பாக ஏதாவது விசேட கொடுக்கல் வாங்கல்கள், ஏனையவைகள் ஏற்பட்டு நிலைமைகளில் தாக்கங்கள் வெளிப்படுமாயின் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தில் போதியளவானதாக ஏற்பாடுகள் இல்லாதவிடத்து பயன்படுத்துவோர்களுக்கு அவற்றை விளங்குகின்ற வகையில் மேலதிக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 9,025,802 ஆன 11 விசேட நிதிய செயற்திட்டங்கள், ரூபா 4,757,900 ஆன 05 வெளிநாட்டு நிதிய செயற்திட்டங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 676,432 ஆன வெளிநாட்டு நிதியத்தின் 01 செயற்திட்டம் தொடர்பாக அந்த நிதியங்களின் தன்மை, நிதியம் கிடைத்த ஆண்டு நிதியம் எதற்காக கிடைத்தது போன்ற விடயங்களின் தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 29(இ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட விசேட நிதியம் தொடர்பான மேலதிக தகவல்கள் எதிர்வரும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். 2021 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தகவல்கள் குறிப்பு இலக்கம் 03 இன் கீழ் வெளிப்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் மேலும் அறியத்தருகின்றோம். | நியமத்தின் நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதியத்தால் பயன்படுத்தப்படுகின்ற பெறுமதி உறுதிப்படுத்தப்படாத கணக்கீட்டு மென்பொருள் (Sage 50) முறைமை மற்றும் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 182,500 ஆன சம்பள மென்பொருளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கற்பனைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த கணக்கீட்டு மென்பொருள் மற்றும் சம்பளம் தயாரிக்கின்ற மென்பொருள் நிதிக்கூற்றுக்களில் கற்பனைச் சொத்தின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | மென்பொருளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கற்பனைச் சொத்தின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடுகள் தொடர்பாக நிதியத்தால் பின்பற்றப்படுகின்ற கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாத ரூபா 3,432,121 ஆன கடன் மீதி காணப்பட்ட போதும் அது தொடர்பாக மீளாய்வு செய்யாமல் ஒவ்வொரு வருடத்தின் போதும் ரூபா 1,964,833 மாற்றமின்றி அறவிட முடியாக் கடன் தொடர்ச்சியாக பேணிச்செல்லப்பட்டிருந்தது. | அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடுகள் தொடர்பாக நிதியத்தால் பின்பற்றப்படுகின்ற கொள்கை நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 2.3 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். 2012 ஆம் ஆண்டில் கடன்பட்டோர் மீளாய்வு செய்து அறவிடமுடியாக் கடன்னாக ஒதுக்கப்பட்ட தொகையில் ஒரு பகுதி தற்போது இதில் காண்பிக்கப்பட்டுள்ளமையால் மற்றும் அதன் பின்னர் ஆன ஆண்டுகளில் கடன்பட்டோர் மீளாய்வு செய்து அவ்வாறு அறவிட முடியாக்கடனாக ஒதுக்குவதற்கு மீதி இணங்காண முடியாதிருந்தமையால் அந்த ஒதுக்கப்பட்ட தொகை இதுவரை காணப்படுவதாகவும் அது மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு அல்லாதிருந்ததையும் தயவுடன் அறியத்தருகின்றோம். | கடன்பட்டோர் மீளாய்வு செய்து அவ்வாறு ஒதுக்கீடுகளை மீதியை இனங்கண்டு அறவிட முடியாக் கடன் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வங்கி இணக்க கூற்றின் பிரகாரம் 2018 மே 31 இல் உள்ளவாறு காசேட்டின் மீதி ரூபா 37,892,760 ஆக இருந்த போதிலும் நிதியத்தின் கணக்கு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற Sage 50 கணக்கீட்டு மென்பொருளின் பிரகாரம் அத் திகதியில் காசேட்டு மீதி ரூபா 33,542,285 ஆனமையால் அந்த மீதியும் ரூபா 4,350,475 வேறுபாடும் அவதானிக்கப்பட்டது. | கையெழுத்தினால் பேணிச்செல்லப்படுகின்ற காசேட்டில் கொடுக்கல் வாங்கல்கள் காசோலை விநியோ-கிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது பதியப்படுகின்றது. காசோலைகள் கணனி அச்சிடல் மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து விலகியமை, அவசரமாக சேவையை விட்டுச் சென்றமை போன்ற காரணத்தினால் சில காசோலைகள் கணனியில் அச்சிடப்படாமல் கையால் எழுதிய | கணனி கணக்கீட்டு மென்பொருளின் பெறப்பட்ட தரவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உள்ளக கட்டுப்பாட்டு உப திட்டங்கள் அறிமுகப்படுத்தி அமுல்படுத்த வேண்டியிருந்ததுடன் உரிய வேறுபாடுகள் அந்தந்த சந்தர்ப்பத்தின் போது இணக்கம் |

| | | | |
|---|---|---|---|
| | | பின்னர் கணனியில் உட்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக கொடுப்பனவு காசோலைகளை கணனி மயப்படுத்தும் போது விநியோ-கிக்கப்பட்ட திகதிகளில் சரியாக குறிப்பிடப்படாமை போன்ற காரணங்களினால் வங்கி இணக்க கூற்று தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட கையால் எழுதப்பட்ட காசோலையின் சரியான காசு மீதியுடன் Sage 50 கணக்கீட்டு மென்பொருளில் உள்ள காசு மீதியுடன் காசு மீதி சில மாதங்களில் இணங்கியிருக்கவில்லை. ஆண்டின் இறுதியின் போது இந்த காசேடு இரண்டினதும் மீதி சமனாக இருக்க வேண்டிய போதும் இந்த காசேடு இரண்டும் மாதாந்தம் நாளாந்த காசு மீதி சமனாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | செய்து சரியான அங்கீகாரத்தின் அடிப்படையில் நாட்குறிப்பு பதிவுகளை இட்டு மாற்றங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 730,000,000 ஆன 04 நிலையான வைப்புக்களுக்குரிய 2018 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 51,426,027 ஆக இருந்த போதிலும் அது ரூபா 50,509,589 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக பெற வேண்டிய வட்டி 916,438 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டின் போது வைப்புச் செய்யப்பட்ட ரூபா 730,000,000 தொகை உரிய வட்டி கணிப்பீடு செய்தல் மீண்டும் பரீட்சித்து பதில் அழிப்பதற்காக தேவையான ஆவணங்கள் கணக்காய்விற்கு கையளிக்கப்பட்டுள்ளமையால் அந்த ஆவணங்களை பெற்றுக் கொண்டதன் பின்னர் விரைவாக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | கிடைக்க வேண்டிய வட்டி சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 02 வங்கிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட 06 மாதங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 940,055 நேர் செலவு வைத்தல்களை இனங்கண்டு ஆண்டின் வருமானங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்விற்கு உரிய ஆவணங்கள் மற்றும் பொழிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால் இந்த கணக்காய்வு ஐய வினாவிற்காக பதிலளிக்க முடியாது இருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நேரடி செலவு வைத்தல்களை இனங்கண்டு ஆண்டின் வருமானத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) இலக்கம் 73254947 என்ற நிலையான வைப்பிற்காக மீளாய்வாண்டிற்குரியதாக கிடைத்த ரூபா 1,702,055 வட்டி தொகை, ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக பெற வேண்டிய வருமானக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றது. அதாவது வருமானம் கிடைக்கின்ற திகதியை கவனத்தில் கொள்ளாமல் அது வருமானத்திற்குரிய காலப்பகுதிக்காக கணக்கீடு செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் வட்டித் தொகை கிடைக்கும் வரை காத்திருக்காமல் கணக்காண்டிற்குரிய வட்டி பகுதி கணிப்பிடப்பட்டு வட்டி வருமானக் கணக்கில் செலவு வைக்க வேண்டிய வட்டித் தொகை கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது. வட்டி பணம் கிடைக்கின்ற தினத்தின் போது பெறவேண்டிய வட்டித் தொகை கணக்கில் செலவு வைக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் 73254947 என்ற நிலையான வைப்பில் இருந்து உருவான வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | ஆண்டிற்குரிய வட்டி, ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.5 அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரபலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தகவல்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய சட்டத்தின் 4(ஊ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் பணத்தை முதலீடு செய்வதற்கும் அதனை முதலீடு செய்து மீள பெற்றுக் கொள்வதற்கும் நிர்வாக சபையின் அங்கீகாரம் பெற வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டின் இலக்கம் 208.4.1 என்ற நிர்வாக சபை பத்திரத்தில் முதலீட்டு விபரங்களில் உள்ளடக்கப்படாத கூட்டு மொத்தமாக ரூபா 450,000,000 ஆன 02 முதலீடுகளுக்காக நிருவாக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நிர்வாக சபை அங்கத்தவர்களின் வேலைப்பழுவின் காரணமாக போதியளவான பிரகாரம் கூட்டங்கள் ஒழுங்கமைத்தலில் வசதியீனம் ஏற்பட்டது அதனால் முதலீடுகளை மீளப் பெறும் போது முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வது நடைமுறையில் வசதியீனமான பணியாக இருந்தது. முதலீட்டினை மீளப் பெற்றுக்கொள்ளல் / வைப்புச் செய்ததன் பின்னர் அதற்காக நிர்வாக சபை மேவுகை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக முன்னுரிமை நடவடிக்கைகள் மேற்கொண்டு 2018 ஆம் ஆண்டின் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முதலீட்டை மீளப்பெறல் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் செயற்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | போது மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு செயற்பாடுகளுக்காக பெறப்பட்டிருந்தது. கணக்காய்வு ஐய வினாவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் மிகுதி முதலீடு எதிர்காலத்தில் முதலீடுகளை மேற்கொள்ளும் போதும் மீள பெற்றுக்கொள்ளும் போதும் இயலுமானவரை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமுதல் தனியார் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் இருந்து அறவிட வேண்டிய நிதிக்கூற்றுக்களில் நீண்ட காலமாக கிடைக்க வேண்டிய மீதியாக உள்ளடக்கப்பட்ட ரூபா 3,432,121 இனை அறவிடுவதற்கு நிதியம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்திருக்வில்லை. | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமுதல் கொண்டு வரப்படுகின்ற அந்த கடன் மீதியை அற விடுவதற்கு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கபடுவதாக அதனை அறவிட முடியாதாயின் நிதிக்கூற்றுக்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் குறிப்பிடுகின்றோம். | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமுதல் கொண்டு வரப்படுகின்ற கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள செலுத்த வேண்டிய ரூபா 8,141,284 ஆன வைப்பு மீதிக்குரிய காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அட்டுறு செலவினங்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 8,141,309.12 பெறுமதியான மீளச் செலுத்தப்பட்ட வைப்பிற்காக தனியான பட்டோலை வழங்கப்பட்டு இருந்தது. மீளச் செலுத்தப்படுகின்ற வைப்புக் கணக்கில் கொடுக்கல் வாங்கல்கள் கனிசமான அளவு காணப்பட்டதன் காரணமாக இவ்வாறு தனியாக வழங்கப்பட்டுள்ளது. | மீள செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வு தயாரிப்பில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 முற்பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 வருடங்களை விஞ்சிய வீட்டுக்கடன், விழா முற்பணம், வாகனக் கடன் மற்றும் விசேட முற்பணங்களின் மீதி முறையே ரூபா 20,736,853 தொகை, ரூபா 1,202,010 தொகை 114,885 மற்றும் ரூபா 86,441 ஆக இருந்ததுடன் அந்த கடனை அறவிடுவதற்கு நிதியம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் 2000 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து மத்திய கலாசார நிதியத்தில் சேவையாற்றிய அமைய தொழிலாளர்கள், உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட விசேட கடன், விழா முற்பணம், பணமாக இனங்காணப்பட்ட பகுதியை அறவிட்டதன் பின்னர் மேலும் இனங்காண முடியாத கணக்குகள் புத்தகங்களில் தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற பழைய நிலுவை கடன் மீதிகள் ஆகும். 1998 இற்கு முன்னர் முன்னைய ஆண்டுகளில் புத்தகங்களில் காணப்பட்டமை மற்றும் இறுதி நிதிக்கூற்றுக்கள் தயாரித்தலில் வெளி நிறுவனங்களை வரவழைத்து மேற்கொள்ளப்பட்டமையினால் இந்த தகவல்கள் நிறுவனத்திடம் காணப்படாமையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் இருந்து பெறப்பட்ட ஆலோசனையின் படி நிருவாக சபை அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் கடன்தொகையின் ஒரு பகுதி புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கடனை அறவிடுதல் தொடர்பான செயற்பாடுகள் உயர் முகாமைத்துவத்தால் முறையாகவும் செயற்திறனாகவும் அமுல்படுத்த வேண்டியிருந்ததுடன் இந்த கடன் தொடர்புடைய பிணைகள் இருக்குமாயின் அந்த பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது இனங்காணப்பட்ட அறவிட முடியுமான கடன்கள் அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிர- மாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய இலக்கம் PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தி | உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபை அங்கீகரித்த பாதீடு கணக்காய்வாளர் தலைமை அதிபதி, வரிசை அமைச்சின் செயலாளர் மற்றும் பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் பாதீடு, நிர்வாக சபையினால் வருடம் ஆரம்பித்து 02 வாரங்களுக்குப் பின்னர் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட போதும் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு குறித்துரைத்த பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் நிருவாக சபையின் தலைவரான கௌரவ அமைச்சரவையை உள்ளடக்கிய ஏனைய அங்கத்தவர்களின் வேலைப்பழுக்களினால் தேவையான பிரகாரம் கூட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்துவதில் வசதியீனமாக இருந்தமை மற்றும் ஏனைய தவிர்க்க முடியாத காரணங்களின் இவ்வாறு உரிய நேரத்தில் பாதீட்டை அங்கீகரித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. எனினும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/12 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒவ்வொரு முயற்சியும் எதிர்காலத்தில் எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீடு குறித்துரைத்த காலத்தில் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,917,023,340 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,471,822,640 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 346,200,700 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் நுழைவுப் பத்திர வருமானம் ரூபா 424,174,415 இனாலும், முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 66,170,964 இனாலும் அதிகரித்தமையும், ஏனைய செலவினங்கள் ரூபா 118,032,784 இனால் குறைவடைந்தமையும் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 யூலை 17 ஆந் திகதியில் உள்ளவாறு காலவதியாவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கணக்கு இலக்கம் 78099850 என்ற நிலையான வைப்பு 2018 யூன் 25 ஆந் திகதி மாற்றிக்கொள்ளப்பட்டமையின் காரணமாக நிதியத்திற்கு இழக்கப்பட்ட வட்டி வருமானம் ரூபா 3,235,370 ஆகும். | நிதியத்தின் பிரதான வருமான மூலமான வெளிநாட்டு சுற்றுலா தாரிகளின் வருகை ஆண்டின் ஒவ்வொரு மாதமும் ஒரே சீராக இருக்கவில்லை. விசேடமாக மே மற்றும் யூன் மாதங்களின் போது ஊழியர் சம்பளங்களை உள்ளடக்கி நாளாந்த செலவினங்களை தீர்ப்பதற்காக போதியளவான பணம் சேகரிக்க முடியாதிருந்தது. அதனால் அந்த சந்தர்ப்பங்களின் போது நிதி தேவையின் பிரகாரம் இவ்வாறு நிலையான வைப்பினை பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் இந்த வைப்புக்கள் காலவதியாவதற்கு முன்னர் மாற்றுவதற்கு முடியும். அதனால் அந்த சந்தர்ப்பத்தின் போது கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட இழக்கப்பட்ட வட்டி வருமானமாக குறைத்துக்கொள்ளும் நோக்கில் குறுங்கால நிலையான வைப்புக்களின் முதலீட்டின் மூலம் பேணிச்செல்லப்பட்டிருந்தது. இலக்கம் 78099850 என்ற மாற்றப்பட்டிருந்த வைப்புக்களும் மூன்று மாதங்களில் காலாவதியாகின்ற வைப்புக்களாக இருந்ததுடன் அந்த வைப்புக்கள் மாற்றப்படாமல் ஒரு வருடத்தில் காலவதியாகும் ஏனைய வைப்பொன்றில் வைப்பொன்று மாற்றப்பட்டிருக்குமாயின் கணக்காய்வு அவதானிப்பு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட இழக்கப்படுகின்ற வட்டி வருமானம் மேலும் உயர்வடைய கூடியதாக இருக்கும். அதன் பிரகாரம் நிதியத்தினால் இழக்கப்பட்ட வட்டி வருமானத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதியத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் நிலையான வைப்புக்களை மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாவாண்டிற்குரிய பெறுமதி ரூபா 327,730,795 ஆன 25 நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களை அங்கீகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களுக்காக முன் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் முறையான உள்ளக கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு உயர் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 3.3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திஸ்ஸமகாராம நூதனசாலையை நிர்மாணிப்பதற்குரிய காணியில் அளவிடல் பணிகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 50,000 அளவிடல் கட்டணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த காணியை கைப்பற்றிக் கொள்ளும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் நூதனசாலையின் நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | திஸ்ஸமகாராம நூதன சாலையை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட காணியின் உரித்தை தீர்த்து வைப்பதற்கு அனுப்பும் போது அதில் காணப்படுகின்ற சிக்கலான நிலைமையின் காரணமாக அதற்காக அதிக காலம் எடுக்கின்றது. இதுவரையிலும் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், அந்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | ஆரம்பமாக மேற்கொள்ள வேண்டிய பணிகளை விரைவாக நிறைவேற்றி நிர்மாண நடவடிக்கைகளை திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற நடைமுறை வேலை கணக்கில் உள்ளடக்கப்பட்ட தேசிய அனுறு பாடசாலை நிர்மாணிப்பதற்காக | தேசிய அனுறு பாடசாலையின் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக கையளிக்கப்பட்ட | நிர்மாண நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 4,975,146 செலுத்தப்பட்டிருந்ததுடன் வடிவமைப்பு விஞ்ஞான ஆலோசகர்களை வரவழைத்ததன் காரணமாக 2017 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்தகாரால் வேலைகள் கைவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் நிர்மாண நடவடிக்கைகள் இடை நடுவே நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிர்மாண நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு உச்ச அளவில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED /12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் நிதியத்தால் 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 05 வருடங்கள் தாமதத்தின் பின்னர் 2023 சனவரி 20 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காலரீதியான அடிப்படையில் அறிக்கை வழங்குவதற்கு நிதியம் தவறியிருந்தமையின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்களின் பயன்பாடு உள்ளதாக்கி கொள்வதற்கும் பயன்பாட்டிற்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. | நிதியத்தின் நிர்வாக சபை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ அமைச்சரையும் ஏனைய அமைச்சர்களையும் உள்ளடக்கி இருந்தமையால் இந்த அங்கத்தவர்களின் பணிப் பணிப்பொறுப்புக்களின் காரணமாக தேவையான பிரகாரம் கூட்டங்களை ஒழுங்கமைத்து கொள்வதற்கு முடியாமை, இந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களில் அனேகமானோர் சேவையில் இருந்து கேட்டு விலகியமை (04 கணக்கு உத்தியோகத்தர்களை உள்ளடக்கி) மற்றும் ஏனைய தவிர்க்க முடியாத காரணத்தினால் இவ்வாறு குறித்துரைத்த கால எல்லையில் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |